கால பராமரிப்பு உதவித் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் 4,000 ரூபாய், இனி 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், இத்தொழிலில் ஈடுபட்டு வரும் 12,236 குடும்பங்கள் பயன்பெறுவர். அரசுக்கு இதனால் ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

(ஈ) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், மதுரை சட்டக் கல்லூரிக்குக் கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்வி மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட இருக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இப்பல்கலைக்கழகத்திற்குக் குளிர்சாதன வசதி, மின்னணு மேடைகள், கணினி ஒலி வீச்சிகள், கண்காணிப்புக் கேமராக்கள் ஆகியவற்றுடன் 1,040 மாணவர்கள் அமரக்கூடிய வகையில் 20 விரிவுரை அறைகள், இயக்குநர் அறை, அலுவலக அறைகள், ஆசிரியர் அறைகள், கௌரவ ஆசிரியர் அறைகள், கருத்தரங்கக் கூடம், மாதிரி நீதிமன்றக் கூடம், ஆவண அறைகள் மற்றும் மாணவியருக்கான பொது ஓய்வறை ஆகியவற்றை உள்ளடக்கி, தரை மற்றும் இரண்டு தளங்களைக் கொண்ட கூடுதல் கட்டடம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வருகின்ற மாணவர்களுக்குக் கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பல்வேறு விழாக்கள் மற்றும் பட்டமளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தற்போதைய கலையரங்கில் போதுமான இடவசதி இல்லாததைக் கருத்தில்கொண்டு, புதிய கலையரங்கம் ஒன்று முதல் தளத்திலும், நூலகக் கட்டடத்தில் உள்ள இடநெருக்கடியைக் கருத்தில்கொண்டு, புதிய நூலகக்

2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கட்டடத்தை தரை தளத்திலும் உள்ளடக்கிய புதிய கட்டடம் 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை மற்றும் சட்டத் துறை ஆகியவை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பின்னர் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்த்தெழுந்த புரட்சியாய், அதிர்வு தந்த உணர்ச்சியாய், தமிழர்தம் நலன் காத்து, உயிர்பேசும் மொழியாக, உணர்வலையின் விழியாக...*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. ப. ரங்கநாதன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *அறிவு சுடரின் ஒளியாக, அமுதசுவையின் துளியாக, தமிழக மக்களோடு இரண்டறக் கலந்துவிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவை இதயத்தில் ஏந்தி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்மூலம் பல்வேறு அறிவிப்புகளை பேரவையில் அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களைச் செயல்வடிவம் ஆக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன்*